

திருவாரூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கூட்டத்தின் நோக்கங்களை எடுத்துக் கூறினார். முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமை கழக பிரதிநிதிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இள.புகழேந்தி, மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா மற்றும் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷனண் , சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன் முன்னிலை ஏற்றனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்க உரையாற்றினார். இதில் தலைமை கழக பிரதிநிதிகள் ஜி.பி.ராஜா, மாலதி நாராயணசாமி சிறப்புரையாற்றினர். அதனை தொடர்ந்து புதிய உறுப்பினர்கள் சேர்க்கை படிவம் வழங்கப்பட்டது. உடன் முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராமச்சந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, எம்.ரெங்கசாமி, சி.ராஜேந்திரன், தலைமை கழக நிர்வாகிகள் து.செல்வம், மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன், தஞ்சை மாநகர செயலாளர் சண்.இராமநாதன், தஞ்சை மாநகர மேயர் (பெ) அஞ்சுகம் பூபதி, மாநில விவசாய அணி துணைச்செயலாளர் எஸ்.ஜித்து, மாவட்ட கழக நிர்வாகிகள் எல்.ஜி அண்ணா, எஸ்.என்.மணிமாறன், அ.புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. அறிக்கை!



கடலூர், செப். 8 -

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.கொ. நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக அயலக அணித் தலைவர்நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம்சுருதி முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக அனைத்து சார்பு அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1) 22.8.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.

2) கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

## நாச்சியார் கோவில் ஆர்.கண்ணன் இல்ல மணவிழா வரவேற்பு!

### சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று வாழ்த்தினார்!

சென்னை, செப். 8-

நாச்சியார் கோவில் ஆர். கண்ணன் – திருமதி. நாகா பாய் இல்ல மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் (06.09.2026) சென்னை, வேளச்சேரியில் நடைபெற்றது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோவில் ஆர்.கண்ணன், திருமதி நாகா பாய் ஆகியோரின் புதல்வர் கே. நாகராஜன், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் நல்லமான்குடி கே.முரளிதரன், திருமதி ஹேமலதா ஆகியோரின் புதல்வி கே.எம். சுபஸ்ரீ (எ) சுபதைலா ஆகியோரின் திருமண விழா 31.8.2026 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் நன்னிலம் ராஜா ராணி மஹாலில் நடைபெற்றது.

இத்திருமண வரவேற்பு விழா நேற்று முன்தினம் (6.9.2026) சென்னை வேளச்சேரியில் நடைபெற்றது.

இவ்விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இவ்விழாவில் திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி செல்வி செல்வம் மற்றும் மணமக்களின் உறவினர்கள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### எங்களுக்கு அடையாளம் தந்த

# கழகத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டு செயல்படுவோம்!

## திருவாரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், செப் 8 -

திருவாரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமை கழகப் பிரதிநிதிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இள.புகழேந்தி, மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா மற்றும் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷனண் , சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன் முன்னிலை ஏற்றனர்.

மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. கூட்டத்தின் நோக்கங்கள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் கழக தலைமைச் செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்துதல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை தலைமை கழக பிரதிநிதிகள் தெளிவாக எடுத்து கூறினார்.

இதனை வழிமொழிந்த மூத்த நிர்வாகிகல் தலையாமங்களம் ஜி. பாலு, வீ.அன்பரசன், பால.ஞானவேல், ஆர்.எஸ். பாண்டியன், வாரை.பிரகாஷ், எம்.எஸ்.கார்த்திக் உள்ளிட்ட ஒன்றிய , நகர பேரூர் செயலாளர்கள் அந்த முடிவுகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, பேசும் போது, எங்களுக்கு சமுதாயத்தில் அடையாளத்தை கொடுத்தது இந்த இயக்கம், இந்த இயக்கம் மேலும் வலுப்பெற கழகம் எடுக்கும் அனைத்து முடிவுகளையும் வரவேற்று, அதற்கு கட்டுப்பட்டு நடப்போம் என நெகிழ்ச்சியோடு பேசினர்.

மேலும் அவர்கள் தங்களின் கழகப்பணிகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். மேலும் தங்களுக்கு பொருப்பபுக்கள் இல்லை என்றாலும் கழகம் கொடுக்கும் அங்கீகாரத்தை ஏற்றுக்கொண்டு தொண்டனாக இருந்து கழக்கப்பணி ஆற்றுவோம் என்றும் உறுதி அளித்தனர். மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார், அயலகஅணி அமைப்பாளர் ஆர்.வி. ஆனந்த், சிறுபான்மைப் பிரிவு அமைப்பாளர் தாஜூதீன் ஆகியோரும் தலைமைக்கழக முடிவை வழிமொழிந்து பேசினார்.

கூட்டத்தில் “ கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை வார்டு கழகங்களில் கழக கொடி ஏற்றி சிறப்போடு கொண்டாடுதல், கழக தலைமை செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி அனைத்து பகுதியிலும் அதிக உறுப்பினர்களை குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள், பெண்களை சேர்தல், ஒன்றிய நகர பகுதிகளை கழகத்தை மேலும் வலுப்படுத்த கழக தலைவரின் வழிகாட்டுதல்களின் படி பிரித்து செயல்பட முழு ஒத்துழைப்பினை தருவது, புதிதாக ஏற்படுத்தப்படும் ஒன்றிய நகர பகுதிகளுக்கும், கழகாதலைமையின் முடிவின்படியான வயது நிர்ணயத்தின் படியும் புதிதாக வரவிருக்கும் நிர்வாகிகளில் அதிக அளவில் இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் வழிவிட்டு கழகத்திற்கு புது ரத்தம் பாய்ச்சும் நோக்கத்தில் செயல்படுவது” உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியில் தலைமை கழக பிரதிநிதியாக வந்திருந்த மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழகத்தின் எதிர்பாராத தோல்வியின் போது , துரோகம் செய்தவர்கள் குறித்தும் தோல்வியில் துவளாத கழக உடன்பிறப்புக்களின் அயராத பணிகள் குறித்தும் உடன்பிறப்புக்களுக்கு முரசொலியில் எழுதிய கடிதம் ஒன்றை வாசித்து கழக்கத்தினரை உற்சாகப்படுத்தினார்.

முடிவில் மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் எம்.ராமகிருஷனண் நன்றி கூறினார்.

## கடையநல்லூர் தொகுதி – மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வனவிலங்குகளால்

# விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்க அரசு முன்வருமா?

## சட்டப்பேரவையில் தி.மு.இராசேந்திரன் பேச்சு!



**சென்னை, செப். 7 -**

**கடையநல்லூர் தொகுதியில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் வன விலங்குகளால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்க அரசு முன் வருமா? என சட்டப் பேரவையில் தி.மு. இராஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**தி.மு.இராசேந்திரன்:** கடையநல்லூர் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வனவிலங்கு களால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் ரா.வீ.இரஞ்சித் குமார்:** விவசாய நிலங்களைப் பாதுகாக்க கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் வனவிலங்குகள் விவசாய நிலங்களுக்குள் வராமல் தடுப்பதற்கு ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் செலவில் வன எல்லையோரம் 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய ஆற்றலில் இயங்கும் மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கும் காட்டுப் பன்றிகளுக்கும் இடையே ஏற்படும் மோதல்களை தடுக்க திறம்பட கையாளும் வகையில் வனப் பகுதிகளை சுற்றி யுள்ள விவசாயப் பயிர்களை காட்டுப் பன்றிகள் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்காக விரிவான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் வகுக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

**தி.மு.இராசேந்திரன்:** உங்களை இரண்டாம் சபாநாயகர் செல்லபாண்டியனாக பார்க்கிறேன். அப்படியென்றால், முதல் சபாநாயகர் செல்லபாண்டியன் உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டால், நான் பயின்ற மேலநீலிதநல்லூரில் உள்ள பசும்பொன் முத்துராம லிங்க தேவர் கல்லூரியோடு அவர் தொடர்புகொண்டவர். அடிக்கடி அவரைச் சந்தித்து பேசுகிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது உண்டு. அதுகுறித்து, உரியநேரத்தில் எனது உரை அமைகிறபோது பதிவுசெய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் வனவிலங்குகளின் நடமாட்டத்தால் வேளாண்மை பாதிக்கப்படுவது குறித்த எனது கேள்விக்கு தக்க விளக்கமளித்த வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது கோரிக்கையுடன் கூடிய வினா என்னவென்றால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எல்லோரும் பார்த்திருப்போம். கோவை – பாலக்காடு இரயில் வழித்தடத்தில், இரயில் மோதி பல யானைகள் இறந்துகிடந்தன. அன்றைய முதலமைச்சர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு கோவை–பாலக்காடு வழித்தடத்தில் மனிதயானை மோதல் நிகழாமலும், இரயில் யானை மோதல் நிகழாமலும் தடுப்பதற்கு 13 கிலோ மீட்டர் தூரம், இந்திய வனத் துறைச் சரித்திரத்திலேயே முதன் முறையாக முழு கோபுரங்களை அமைத்து, 24 மணிநேர கண்காணிப்பில் இயங்கக்கூடிய அதற்கு ஒரு கட்டுப்பாட்டு அறையையும் அமைத்தார்கள். இந்த மூன்றாண்டு காலங்களில் அங்கு யானை மனித மோதல் நிகழவில்லை என்றும், யானை இரயில் மோதல் நிகழவில்லை என்றும் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. வனத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு, அந்தத் திட்டம் சிறப்பாக இயங்குகிறதா என்பதை ஆய்வு செய்து, இயங்குகிறது எனில் அதை முதற்கட்டமாக எங்கள் கடையநல்லூர் தொகுதியிலும், தென்காசி மாவட்டத்தில் 80 கிலோ மீட்டர் தூரமிருக்கின்ற மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியிலும் அமல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுப் பன்றிகளின் தொல்லையால் விவசாயம் சீர்குலைந்திருக்கிறது; இயற்கை இடர், விளைச்சல் இன்மை, மழையின்மை, விலையின்மை ஆகிய நான்கு காரணிகள்தான் வேளாண்மைக்கு இடையூறாக இருக்கின்றன என்று சொன்னால், ஐந்தாவது காரணியாக சில ஆண்டுகளாகக் காட்டுப் பன்றிகள் வனப் பகுதிகளில் மட்டுமல்லாமல், சமவெளிப் பகுதிகளிலும் வந்து வேளாண்மையைச் சீர்குலைக்கும் அவலம் நேர்ந்திருக்கிறது. விவசாயிகளிடம் கேட்கும்போது அவர்கள் முன்வைக்கும் ஒரே கோரிக்கை, காட்டுப் பன்றிகளை வனவிலங்குகளின் பட்டியலிலிருந்து அகற்றிவிட்டால் அதை நாங்களே அப்புறப்படுத்துவோம் என்பதுதான். ஆகவே, அரசு இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்ற, காட்டுப் பன்றிகளை வனவிலங்குகளின் பட்டியலிலிருந்து அகற்றுவதற்கு ஒன்றிய அரசிற்குத் தேவையான அழுத்தங்களைக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் ரா.வீ.இரஞ்சித் குமார்:** நம்முடைய தமிழ்நாட்டில் 23,188 சதுர கிலோ மீட்டர் வனப் பகுதி உள்ளது; சுமார் ஆயிரக்கணக்கான கிராமங்களில் வனத்தை யொட்டிய விவசாய நிலங்கள் உள்ளன. இந்தக் காட்டுப்பன்றிப் பிரச்சினை யால் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாய நிலங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவது உண்மைதான்; அதற்கு விதிகள் உள்ளன. ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் வரை வெளியே வந்தால் வன அலுவலர்களிடம் தெரிவித்தால், அவர்கள் அதை காட்டிற்குள் விரட்டி அனுப்புவார்கள். மூன்று கிலோ மீட்டர் தூரம் வெளியே வந்தால் அதைச் சுடுவதற்கும் நம்முடைய தமிழக அரசு வனத் துறைச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தி.மு. இராசேந்திரன்:** வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது, கடந்த திராவிட மாடல் அரசில் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கிய அந்த உத்தரவுதான் தற்போது நடைமுறையில் இருக்கிறது. நீங்கள், காட்டுப் பன்றிகளை விலங்குகளின் பட்டியலிலிருந்து கரடி, சிங்கம், புலி இவையெல்லாம் விலங்குகளின் பட்டியலில் உள்ளன, அதை மனிதர்கள் அகற்ற முடியாது; அதுபோலவே, வேளாண்மையை அழிக்கின்ற காட்டுப் பன்றிகளும் அந்த வனவிலங்குகளின் பட்டியலில் இருப்பதால், அதை விவசாயிகளால் அப்புறப்படுத்த முடியாத நெருக்கடி உள்ளது. ஆகவே, காட்டுப் பன்றிகளை வனவிலங்குகளின் பட்டியலிலிருந்து அகற்றுங்கள் என்கிற அழுத்தத்தை ஒன்றிய அரசிற்குத் தமிழ்நாடு அரசு கொடுத்து, அந்தப் பட்டியலிலிருந்து எடுத்துவிட்டால், வேளாண்மைக்கு இருக்கின்ற பெரும் துயர் நீங்கும் என்பதைத் தெரிவித்து, தமிழ்நாடு அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் ரா.வீ.இரஞ்சித் குமார்:** நம்முடைய தமிழக அரசு வனத் துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சென்னை கடற்கரை - தாம்பரம் இடையே

# இரவு நேர ரயில் வழக்கம் போல் இயங்கும்!

சென்னை, செப். 8 -

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் சுமார் ரூ.842 கோடியில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் முக்கிய பகுதியாக, பயணிகள் வசதிக்காக பிரம்மாண்ட இரும்பு நடை மேம்பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்த பணியின் காரணமாகக் கடந்த 25ஆம் தேதி முதல் நேற்று வரை இரவு 11.15 மணி முதல் அதிகாலை 4.15 மணி (5 மணி நேரம்) வரையில் கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு இடையே இருமார்க்கமாகவும் இரவு நேர மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. இந்த நிலையில் இன்று முதல் சென்னை கடற்கரை தாம்பரம் இடையே இரவு நேர மின்சார ரயில்கள் வழக்கம் போல் இயக்கப்பட இருப்பதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், இரவு நேர மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட்டிருந்த காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்தது.

எனவே, இந்த வழித்தடத்தில் மின்சார ரயில்கள் வழக்கம்போல இயக்கப்படும். அடுத்த கட்டமாக ரயில் மாற்றங்கள் குறித்த புதிய அறிவிப்பு ரயில்வே நிர்வாகம் சார்பில் வரும் வரையில் இதே நடைமுறை தொடரும் என்றனர்.



கோவை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், துடியலூர் எஸ்.எஸ்.கமலேஷ் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறுசீரமைப்பு குழு தலைமை கழக நிர்வாகிகள் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர்,நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், கழக மகளிர் அணி துணை செயலாளர், சேலம் மாநகராட்சி முன்னாள் மேயர் ஜெ.ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் அரசு மகளிர் மற்றும் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, கல்வியியல் கல்லூரி குழுமத் தலைவர் பேராசிரியர் முனைவர் பி.நடேசன் தலைமையில் பேராசிரியர், முனைவர் பொன்.கதிரேசன் ஏற்பாட்டில் நடைபெற்ற பன்னாட்டு ஆசிரியர்கள் தின விழா,நூல் வெளியீட்டு விழா மற்றும் முப்பெரும் விழாவில், கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவரும்,தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவருமான ரெ.தங்கம் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை பணியாற்றியமைக்காக விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. கல்லூரி குழுமத்தின் செயலாளர் என்.கண்ணன், ஆசிரியர்கள், பேராசிரியர்களும், அரசு அதிகாரிகளும், எழுத்தாளர்களும், அறிஞர்களும் பங்கேற்றனர். சிறப்பாக செயலாற்றிய பேராசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.